மூலிகை மணி

வேஷார் மருத்துவர் :- ஆ.இரா.கண்ணப்பர்

மலர் 10] பிரமாதீச ௵ — மார்கழி ௴ [இதழ் 2

[167-வது மூலிகை]

இரணக்கள்ளி



விலை 50-கா

உ
முருகா.

‘மூலிகை மணி’

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

மார்கழி இதழில்

தொலைபேசி எண் : 726. த. பெ. எண் : 126

69, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ

முருகா.



எந்நாளும் சுகம் நல்கும்!

எடுப்பு

ஓம் ஓம் ஓம் முருகா
உயர்கதி நீ தா முருகா (ஓம் ஓம் ஓம் முருகா)

தொடுப்பு

இந்த மானில இன்ப மெல்லாம்
ஒரு கணத்துள் மாறி விடும்
உந்தன் ஜீவிய நாமம் ஒன்றே
எந்நாளும் சுகம் நல்கும் (ஓம் ஓம் ஓம் முருகா)

முடிப்பு

காதலின் தோல்வியிலும் — ஒரு
காசிலா வறுமையிலும் — மனம்
வாடியே மடிகின்றூர் — வெறும்
மாயை இவை உணரார் (ஓம் ஓம் ஓம் முருகா)

மானிடர் யாவருமே — மன
மாயையுள் மூழ்கிவிட்டார் — உயர்
ஞாலத்தில் தேர்ந்துவிட்டால் — உந்தன்
பாதத்தைச் சேர்ந்திடுவார்! (ஓம் ஓம் ஓம் முருகா)

[தேவ நாராயணன், சென்னை-21.]

நீங்காது நெஞ்சில் நிலைத்துவிட்ட எனது வளர்ப்பு அன்னை

ஜீவரத்தினம்மாள் அவர்களின்

2-ம் ஆண்டு நினைவு நாள்

6—1—74 அன்று வருகிறது!



இதனை வாசக அன்பர்கட்கு நினைவுபடுத்தி
அன்னாரின் ஆன்மா சாந்திபெற
எல்லாம் வல்ல தணிகை முருகன் இன்னருள் புரிவானாக!

ஆ. இரா. கண்ணப்பர், ஆசிரியர், மூலிகை மணி

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 10] பிரமாதீச ஸ்ரீ — மார்கழி மீ டிசம்பர்-73 [இதழ் 2

தமிழ் உணர்வைத் தட்டி எழுப்பிய

சிங்கம் மறைந்து விட்டது!

சாதி, மதம், தீண்டாமை, சாத்திரம், கோத்திரம் என்பது எல்லாம் மனித வாழ்விற்கு பெரும் முட்டுக்கட்டைகள். இவை களைத் தகர்த்தெறிய வேண்டும் என்று தமிழ் நாட்டில் முதல் முதலாக நினைத்தவர்; ஈரோடு ஈன்ற இளஞ்சிங்கம்,

ஈ. வே. ராமசாமி பெரியார் ஒருவர் தான்!

காந்தியடிகளைக்கூட இவருக்குப் பின்னர்தான் வைக்கவேண்டும்.

தமிழனை பிற நாட்டான் தமிழனாகவே மதிக்கவில்லையே! என்று வினாடிககு வினாடி புழுவாகத் துடித்தவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள். தமிழன் என்றால் ஈ. வே. ரா;—ஈ.வே.ரா. என்றால் தமிழன். இதை மாற்றானும் மறுக்க இயலாது. தமிழனின் தன்மானத்தைக் காக்க இவர் எத்தனை எத்தனையோ போராட்டங்கள், புதுபுது மாதிரியான அதிரச்சிதரும் நடவடிக்கை களை கையாளும் இவருடன் பின்செல்பவர்ட்கு அஞ்சா நெஞ்சம் தான் வேண்டும். அஃதிலாதவர் இவர்பின் சென்றிட இயலாது.

அது மட்டுமல்ல! இவர் மேடைப் பேச்சு இருக்கிறதே! அது தனி வகை. ஆரம்பத்திலேயே,

"உங்களுக்கெல்லாம் புத்தி இல்லை; ரோஷமில்லை; நீங்கள் எல்லாம் சூத்திரனுக்குப் பிறந்த பசங்கள்; அப்படி எழுதி வெச்சிருக்கான். அதையும் நீங்கள் 'புராணம்' என்று நம்பி படிக்கிறீங்க!'

என்று எடுத்தவுடனே கூட்டத்தினரைத் திட்டி வசைமொழி பாடுவார். இப்படி அவர் உரைத்து உரைத்துத் தான் இன்று தமிழ்நாடு தன்உணர்வு பெற்று. 'நான் தமிழன்' என்று மார்தட்டிப் பேசும் அளவுக்கு முன்னேற்றமடைந்து வருகிறது

இப்படி முன்னேற்றம் காணும் நேரத்திலே தமிழகத் தந்தையான பெரியார் மறைந்த செய்தி கேட்ட எந்த தமிழனும் அதிர்ச்சியடையாமல் இருக்கமாட்டான். தமிழ் நாட்டானை 'உயர்த்த வேண்டும்' என்று தனது 96-வயது வரை அயராது உழைத்து தமிழ் நாட்டை உருவாக்கி ஏறுநடை போட்ட சிங்கம் மறைந்து விட்டதே! என்று ஏங்கித் தவிக்கும் தமிழர்களிலே — மூலிகை மணி ஆசிரியரும், அவரைப் பின் தொடர்ந்த வாசக, சந்தா அன்பர்களும் ஆவார்கள் என்பதை உணர்ச்சி பூர்வமாகக் கூறிக்கொள்ளுகிறோம்.

தாயைப் பிரிந்த சேய் போல்; தமிழகத்தைப் பிரிந்து சென்ற தந்தை ஈ. வெ. ராமசாமி பெரியார் அவர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டுவதுடன், அன்னாரின் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மூலிகை மணியின் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக!



'இரணக் கள்ளி'

(167-வது மூலிகை)

கள்ளி இனங்களில் இந்த இரணக் கள்ளி செடியாக வளரும் இனம். ஆலமர இலையைப் போல, ஆனால் சற்று தடிப்பாக இருக்கும் இதன் இலையை எடுத்து, ஒரு நூலைக் கொண்டு கட்டிப் போட்டால் இந்த இலையிலிருந்து சிறிய இலைகள் விட்டு துளிர்க்கும். ஆனதினால் இதற்கு கட்டிப் போட்டால் குட்டிப் போடும் என்ற பெயரும் உண்டு. இது வரண்ட சமவெளிகளில் எங்கும் தன்னிச்சையாக வளரக் கூடியது.

பொதுக் குணம்

இரணக் கள்ளி பொதுவாக நீர் மலம் போக்கும்; வாந்தியுண்டாக்கும்; தடிப்புண்டாக்கும் செய்கையுடையது. கள்ளி இனங்களான கொம்பு கள்ளி, கொடிக் கள்ளி, சதுரக் கள்ளி, திருகுக் கள்ளி என்ற கள்ளியினங்களுக்கு என்ன செய்கை உண்டோ, அதே செய்கை இதற்கும் உண்டு. ஆனால் இந்த இரணக் கள்ளி செடியில் பால் இராது.

கொசுவை ஒழிக்க

இரணக்கள்ளி செடியைக் கொண்டு வந்து வீட்டில் உயரத்தில் கட்டி வைக்க கொசுக்கள் இதன் வாடையால் வீட்டில் தங்காமல் ஓடிவிடும்.

சகல விதமான ரணம் நீங்க

இரணக் கள்ளி இலையை அரைத்து நாள்பட்ட இரணங்களின் மேலும், ஆருத குழிப்புண்களிலும், குட்ட நோய்களில் காணும் இரணங்களுக்கும் வைத்துக் கட்டிவர அவை நாளடைவில் ஆறிப்போகும்.

தேள் கடி விஷம் இறங்க

இரணக் கள்ளி இலையை இடித்துச் சாறு பிழிந்து அந்த சாற்றில் 2 துளி வெந்நீரில் கலந்து உள்ளுக்குக் கொடுத்த பின்னர், தேள் கொட்டின கடிவாயில் மேற்படி இலையை அரைத்து வைத்து கட்டிவிட தேள் கடி விஷம் இறங்கிப் போகும்.

இலைக் குடிநீர்

இதன் இலையை சிதைத்து மிளகு 4, சீரகம் 1 சிட்டிகை போட்டு மண் சட்டியில் 2 குவளை நீர் விட்டு கொதிக்கக் காய்ச்சி 1 குவளையாக்கி காலைமாலை அரை குவளை விதம் குடித்துவர சன்னி ரோகம், கப வாத நோய்கள், நரம்புச் சிலந்தி, நளிர் வாத நோய்கள் ஆகியவைகள் போகும்.

கல்லீரல், மண்ணீரல் நோய்களுக்கு

இரணக் கள்ளி இலையை இடித்துச் சாறு பிழிந்து அரை கிலோ பசு வெண்ணெயுடன் 50 மில்லி சாறு சேர்த்து நெய் காய்ச்சி எடுத்துக் கொண்டு, அந்த நெய்யை பிரண்டைத் துவையல் சோற்றுடன் கலந்து அதில் மேற்படி நெய்யை உருக்கி ஊற்றி பிசைந்து பகல் உணவில் மட்டும் சாப்பிட்டுவர குன்ம நோய், அசீரணம், வயிற்றில் ரணம், வாயு தொல்லை மற்றும் சிறுகுடல், இரைப்பை, பெருங்குடல் ஆகியவைகளில் காணும் எல்லாவித புண், ரணம், அழற்சி யாவும் ஆறிப்போகும். ஆபரேஷன் செய்து தான் தீரவேண்டும் என்ற நோயாளர்களும் மேல் கண்ட முறையால் அறுவை சிகிச்சையின்றி குணமாக்கிக் கொள்ளலாம்.

பத்தியம் : சுட்ட புளி, வறுத்த உப்பு சேர்த்துக் கொண்டு இதர பொருட்களை நீக்கி இச்சா பத்தியமாக இருப்பது அவசியம்.

சர்ம நோய்கள் தீர

இரணக் கள்ளி செடியின் சமூலத்தை எடுத்து இடித்துப் பிழிந்த சாறு 500 மில்லி, தேங்காய் எண்ணெ 500 மில்லி, அதனுடன் கஸ்தூரி மஞ்சள் 10 கிராம், நீரடிமுத்து 20 கிராம், கார்போக அரிசி 30 கிராம், கப்பு மஞ்சள் 40 கிராம், கசகசா 5 கிராம் சேர்த்து இடித்து யாவும் ஒன்ருக கலந்து அடுப்பில் சிறு தீயாக கொதிக்க வைத்து சாறு சுண்டிய பின்னர் வடிகட்டி வைத்துக் கொண்டு, காலையில் எழுந்து சர்மநோய் உடையவர் தலை முதல் கால் வரை மேலுக்குப் பூசி அரை மணி நேரம் ஊரவைத்துப் பின்னர் இளஞ்சூடான நீரில் (சீயக்காய்த் தூள் போட்டு) குளித்துவர குட்டம், மேகநீர் ஊரல் படை, கருமேகநீர் சம்பந்தமான சர்ம நோய், செம்மேகப் படை, கிரந்தி நோய்கள் யாவும் போகும்.

மரு, பாலுண்ணி நீங்க

இரணக் கள்ளிச் சாற்றை இடித்துப் பிழிந்து மருவு, பாலுண்ணி ஆகியவைகளுக்கும், கால் ஆணி, சொற சொறப்பான மருக்கள் பேரில் இரவு நேரம் தடவி வர அவைகள் மாறும். ⁕

பொங்கல் வாழ்த்து!

அன்பார்ந்த வாசக, சந்தா அன்பர்கட்கும், தமிழ்ப் பெருங்குடி மக்கட்கும், குறிப்பாக உழுது பயிர் செய்து மக்கள் பசிப்பிணியைத் தீர்க்கும் விவசாயிகட்கும் எமது இதயம் கனிந்த நல் "பொங்கல் வாழ்த்துக்களை" அர்ப்பணம் செய்கிறோம்.

வாழ்க பொங்கல்!

தழைக்க பயிர் வளகை!! ஓங்குக தமிழ்!!!

கிருஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்து!

ஆங்கில புத்தாண்டு பிறந்தது — 1974. அதனுடன் ஏசுநாதர் பிறப்பும் அகில உலக மக்கள் நினைவிலும் எழும்! நமது இந்திய உப கண்டத்தில் வாழும் கிருத்துவ அன்பர்கள் எல்லோரும் ஏசுநாதரை நினைவுகூர்ந்து ஆடிப்பாடி களித்திடும் வேளையில் மூலிகை மணியின் அன்பு நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றது.

— மேலாளர், மூலிகை மணி.

மூலிகை மணியின்
கடந்த ஒன்பதாண்டு மலரும், இதழ்களும் கைவசம் சில பிரதிகளே உள்ளன.

முதல் ஆண்டு	மலர்-1,	இதழ்-1, 2, 3, 4, 5, 7, 10, 11, 12	
	மலர்-2,	இதழ்-1, 2, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12	
மூன்றாவது ஆண்டு	மலர்—3,	12 மாத இதழ்களும் உள்ளன.	
நான்காவது ஆண்டு	மலர்—4,	,,	,,
ஐந்தாவது ஆண்டு	மலர்—5,	,,	,,
ஆறாவது ஆண்டு	மலர்—6,	,,	,,
ஏழாவது ஆண்டு	மலர்—7,	,,	,,
எட்டாவது ஆண்டு	மலர்—8,	,,	,,
ஒன்பதாவது ஆண்டு	மலர்—9.	,,	,,

மேலே குறிப்பிட்ட மூலிகை மணி இதழ்களில் தேவையானவற்றைக் குறிப்பிட்டு ஒரு புத்தகம் விலை 50-காசு வீதம் தொகையை M. O. அனுப்பினால் தபாலில் அனுப்பி வைக்கப்படும். V. P. P. கிடையாது.

உ

முருகா.

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்படமாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி—பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கபட மாட்டாது. கூடிய வரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்]

• • •

கே: ஐயா, நம் நாட்டில் சிலர் சவங்களை புதைக்கிறார்கள்; சிலர் சுட்டு எரிக்கின்றனர். இதன் காரணம் என்ன?

ப: சவங்களைப் பொதுவாக மயானத்தில் அடக்கம் (மண்ணில் புதைப்பது) செய்வது தான் வழக்கம். தலைமகன், தலைமகளாகப் பிறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யமாட்டார்கள். ஏனெனில் தலைமகன், தலைமகளாகப் பிறந்தவர்களின் 'மண்டை ஓட்டை' மாந்திரீகம் செய்ய சிலர் தேடி அலைவதுண்டு. இப்படி எடுக்காமல் இருக்கவே தான் உடலை எரித்து விடுவார்கள். எரித்துவிட்ட, அதாவது தீயில் சுடப்பட்ட மண்டை ஓடு எலும்புகளால் மாந்திரீகம் செய்ய முடியாது. இது தான் உட்பொருள். வேறு எந்தவித காரணமும் இல்லை.

கே: தான் கற்ற வித்தையை; தன்னுடைய செருக்கை; மண்டை கனத்தை; குதர்க்க வாதம் செய்வதை; எதிர்த்துப் பேசுவதை யார் யாரிடம் வைத்துக்கொள்ளக் கூடாது?

ப: தந்தை, தாய், குரு, தெய்வம் ஆகிய நால்வரிடத்தில் கூடாது.

கே: என் தந்தை வயது 45. மூன்று ஆண்டுகளுக்கு முன், அவருக்கு ஆசனத்தில் சதை வளர்ந்து (பிஸ்டுலா) என்ற நோய் ஏற்பட்டு, அறுவை சிகிச்சையக்கி சிறிது குணம் காணப்பட்டது. ஆனால் இப்பொழுது மறுபடியும் அதே நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறார். இதை அடியோடு அகற்ற தங்களுடைய சித்த வைத்திய முறை — மூலிகை சிகிச்சையினால் முடியுமா?

ப: பசுமையான அருகம்புல் ஒன்றே போதும்! தினமும் எலுமிச்சை அளவு அரைத்து சாப்பிட்டு பசும்பால் குடித்து வர 40 நாளில் நீங்கிவிடும். நாள்பட்டதானால் நண்டுக்கல் நத்தை ஆமை ஓடு பற்பங்களும், சிலாசத் அமிர்தம், சண்டமாருதம் போன்ற — சித்த மருத்துவ முறைகளால் மருத்துவர் ஆலோசனைப்படி அளவு முறை பத்தியமிருந்து உண்டுவர அடியோடு நோய் ஒழிந்து போகும்.

கே: நான் 21 வயதுள்ள பட்டப்படிப்பு பயிலும் மாணவன். புத்தகத்தை படிக்கவேணும் என்று பிரித்து எடுத்துப் படிக்க ஆரம்பித்தவுடனே தலைவலியும், கண்ணில் நீரும் வடிகிறது. தூக்கமும் வருகிறது. இதை பூரணமாக போக்க ஒரு வழி கூறவும்?

ப: தினமும் விடியற்காலையில் எழுந்து குளிர்ந்த நீரில் தலைக்கு நீராடி தூய்மையான வெண்ணிற ஆடை அணிந்து, இறைவனை போற்றி புகழ்ப்படி நெற்றியில் மத சின்னமணிந்து பின்பு உட்கார்ந்து பாடத்தை படித்துப் பாருங்கள். வருகிறதா? கூறுங்கள்.

கே: நான் நெசவு தொழில் செய்பவன். நெசவாளர்களுக்கு பொதுவாக, நடுத்தர வயதில் உள்ளவர்களுக்கு மார்பு வலி இருந்து வருகிறது. வலி வலது பக்கம் தான்—வாத மருந்து சாப்பிட்டும் பலன் அளிக்கவில்லை. நிரந்தர குணம் காண ஒரு மருத்துவம் கூறவும்?

ப: மான் கொம்பு பற்பத்தை தேனில் குழைத்து உண்டு, அதன் பிறகு மருதம் பட்டை குடிநீர் 1 குவளை குடித்து வரவும். இப்படி செய்து வர, வேலை செய்து வரும் நெசவு தொழிலாளிகளுக்கு மார்பு வலி வராது.

கே: சில நெசவாளர்களுக்கு குழியில் கால் விட்டு நெசவு தொழில் செய்யும்போது, கால் வீக்கம் உண்டாகிறது.

ஆனால் அடுத்த நாள் காலையில் வீக்கம் காண்பதில்லை. வேலை செய்த பிறகு தான் வீக்கம் காணப்படுகிறது. மருந்தினால் குணம் காண முடியவில்லை என் வயது 45. இந்த நோய் எனக்கும் தாக்கி இருக்கிறது. அமுக்கிரான்கிழங்கு அரைத்துப் போட்டும் குணமில்லை! மூலிகை சிகிச்சை ஒன்று கூறவும்?

ப: செம்பரத்தம் பூ 2, சீமை அத்திப்பழம் ஒன்று ஆழாக்குப் பசும்பாலில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி சிறிது கற்கண்டும் சேர்த்து இரவு படுக்கு முன்பு குடிக்கவும். இப்படி 20 நாள் செய்ய இந்த வீக்கம் தானாகவே போகும். ஆனால் புகைப் பழக்கம் அறவே கூடாது.

கே: என் வயது 45. எனக்கு 1968 முதல் பனிகாலம் ஆரம்பமாகும்போது டிசம்பர் மாதத்தில — வாய ருசி இல்லாமல் போகும். கை கால வயிறு இடுக்குகளில் படை போல் படிவி, தோல உரியும். ரணமாக ஆரிப்பும தடிப்பும் உண்டாகும். நாக்கு வரண்ட நிலையில இருக்கும். எது சாப்பிட்டாலும் ருசி சரியான படி இருப்பதில்லை! மே — மாதம் பிறந்தவுடன உடல் சௌகரியப் படும. இதற்காக ஆங்கில வைத்தியமும, ஹோமியோபதி வைத்தியமும் செய்து பார்த்தேன்; குணம் காண முடியவில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

ப: எமது 'மகாமூலிகை எண்ணெ'யை இரண்டு மாதத்திற்கு ஒருதரம் பத்தியமிருந்து 4 புட்டி சாப்பிட்டால் போதும் பிறகு இந்த தொல்லையே வராது. செய்து பார்த்து பிறகும் சொல்லவும்.

கே: என் வயது 29. இரண்டு வருடங்களாக எனக்கு சிறுநீர் கழிக்கும் பொழுது, சீழ் வடிகிறது. இந்த நோயைப் போக்க ஒரு வழி கூறவும்.

ப: இது சீழ் இல்லை தம்பி! 'வெள்ளை ஒழுங்கு' என்பதாகும். தினமும் கட்டுக்கொடியை அரைத்து எலுமிச்சம்பழ அளவு உள்ளுக்குச் சாப்பிட்டு எருமைத் தயிர் குடிக்கவும். 20 நாளில் குணமாகும்.

கே: நான் ஒரு மூலிகை மணி வாசகன். பிரம்மச்சாரிகளுக்கும், வாலிபர்களுக்கும் விந்து மாதம் ஒரு முறையாவது வெளியாகுவது இயற்கையே என்றும், விந்து தாதுப் பையில் நிலைறந்து ததும்புவதே இதற்கு காரணம் என்று நூல்களில் கூறப்

பட்டுள்ளது. இப்படி விந்து வெளியாகாமல் ரெத்தத்துடன் கலந்து உடல் பலம் அடைய, சித்த மருத்துவத்தில் ஏதேனும் வழிகள், மருந்துகள் உண்டானால் கூறவும்.

ப: திரைப்படம், காதல் ரசனை, காமவேட்கை இல்லாமலும், பலவிதமான மட்டரக எண்ணங்களைத் தூண்டும் புத்தகங்களை படிக்காமலும் இருந்தால் பிரம்மச்சாரிகளுக்கு விந்து வீணாகாது. இதுவே சித்த மருத்துவத்தில் பாடமாக போதிப்பது. மருந்து இதற்கு தூதுவளை ஒன்றே சிறப்பு மிகுந்ததாகும்.

கே: சிற்றின்பத்தின் காரணமாக வெளியாகும் விந்துவை கட்டுககொடி, பெருநெருஞ்சில் போன்ற மூலிகைகளால் தடுக்கப் பட்டால் நாளடைவில் உடலுக்கு கெடுதல ஏதேனும உண்டாகுமா? விளக்கம் கூறவும்.

ப: விந்துவைக் கட்டி குற்றத்தை நீக்குமே ஒழிய, உடலுக்கு கெடுதல் எந்த மூலிகையும் உண்டாககாது.

கே: எட்டிக்காய் விதையின் பயன் என்ன? தேக வலிமைக்காக மல்யுத்தப் பயிறசியாளர்கள், இந்த விதைகளை பஸ்மமாக்கி சாபபிடுகிறார்களாம் இது உண்மையாயின், அந்த முறையை தங்கள் இதழில் விளக்கவும்.

ப: எட்டிக்காய் சத்து சிலர் நரம்புத்தளர்ச்சிக்காக மருந்துகளில் சேர்க்கின்றனர். காம இச்சையைப் போக்க கடந்த ஞானிகள் விதி முறையுடன் சாப்பிடுவார்கள். இதுவும் அளவுக்கு மிஞ்சினால் விடமிக்கும்; இதனால் தேக வலிமை உண்டாகாது. இது உண்மையுமல்ல!

கே: இப்பொழுது குழந்தைகளுக்குப் "பால் பவுடர்" கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது. பால் பவுடருக்கு சமமாக இயற்கை உணவு தயாரிகக இயலுமா? என்பதையும் அதன் முறையையும் தெரிவிக்கவும். இதனால் பலர் பலன் அடைவார்கள்.

ப: இயற்கையான பால் போன்ற "சத்துணவு" அளவுடன் அமைந்த பொருள் அகில உலகத்திலும் இயற்கையாக கிடைப்பது அரிது. பால் தவிர மற்றைய பொருள்களில் சில சத்துக்கள் குறைவாகவும், சில சத்துக்கள் இல்லாமலேயேயும் இருக்கும் எனவே பாலுக்குச் சமமானது மூலிகை உலகிலும் கிடைப்பதரிது ஆகும்.

கே: என் வயது 17. உடல் தோற்றம் கருமையாக இருக்கிறது உடல் நிறம் சிவப்பாக ஏதாவது எளிய முறை இருப்பின் கூறவும். மருந்தோன்றி இல்லையில் ஏதாவது முறை உண்டோ?

ப: இயற்கைக்கு முரண் உங்கள் கேள்வி. தெனாலிராமன் கருப்பு நாயை வெள்ளையாக்க துணி துவைப்பது போல செய்தானாம். மருதோன்றி இலையால் கருமையை சிவப்பாக்க முடியாது தம்பி! கருமை கருமை தான்.

கே: சீமை வேலியை, வீட்டு விறகாக உபயோகப்படுத்துவதால், ஏதாவது கெடுதல் ஏற்படுமா?

ப: நிச்சயம் அதன் எரிவாயுவால் கெடுதல் உண்டு! இந்த பிசாசு செடி வந்துதான் நம் நாடு கெட்டது. நல்ல பல மூலிகை இனங்கள் அழிந்து வருகின்றன. 30 ஆண்டுக்கு முன்பு இந்த செடியே நம் நாட்டில் இல்லை. நடுவில் வந்து நம் உயிரையே வாட்டி வதைக்கும் இந்த செடி ஒழியும் நாள் என்றோ?

கே: எனக்கு வயது 55. ஐந்து வருடங்களுக்கு முன் எனக்கு காய்ச்சல் கண்டு, ஊசி மருந்துகள் கையாண்டு, காது சரிவர கேட்காமல் போய்விட்டது. காது மீண்டும் குணமடைய ஒரு வழி கூறவும?

ப: அருகம்புல், மிளகு, சீரகம் அரைத்து 40-நாள் சாப்பிடவும். காலை வேளையில் இது. பகல் உணவுடன் தூதுவளை இலையை நெய்யில் வதக்கி துவையல் செய்து சோற்றுடன் உண்டு வரவும்.

கே: எனது மூத்த மகள் வயது 25. 3-மாதங்களுக்கு முன், தொண்டை வலி கண்டு சாப்பிட்ட உணவு தொண்டையிலேயே இருப்பது போலவும், ஏப்பம் வராமல சிரமம் அடைந்து, டாக்டரிடம் ஊசிகள் போட்டு வலி நீங்கியது. ஆனால் சரியான பசி, ஜீரணசக்தி இல்லை. உடல் மெலிந்து போயிற்று. திருமணமாக வில்லை. ஏப்பம அதிகமாக வருகிறது. இதைப் போக்க ஒரு சிகிச்சை கூறவும்?

ப: வயிற்றில் ரணம் ஏற்பட்டு இருக்கும். பொடுதலங்காயை நெய் விட்டு வதக்கி பகல உணவில சாப்பிடச் சொல்லுங்கள். 10 நாளில்

இதில் குணம் தெரியவில்லையானுல், நேரில் மருத்துவப் பரிசோதனை செய்து தக்க மருந்தை சாப்பிடுவது தான் சிறப்பு

கே: எனது இளைய மகளுக்கு வயது 20. நன்ருகயிருந்த பற்களில் திடீரென்று இரத்தமும், சீழும் வடிய ஆரம்பித்து, ஆங்கில முறை வைத்தியம் செய்து வீக்கம் குறைந்து விட்டது. ஆனால் பற்கள் ஆட்டம் கொடுத்துவிட்டு, இன்னும் சீழும், இரத்தமும், வலியும் இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?

ப: கருவேலம்பட்டை பற்பொடியால் 40-நாள் தவருமல் பல் துலக்கி வரச் செய்யவும். பற்கள் குறை எல்லாம் நீங்கும்.

கே: வெற்றிலை பாக்குடன், சுண்ணும்பு ஏன் சேர்த்துப் போடுகிருேம் என்பதை அறிய விரும்புகிறேன். என் பாட்டியார் உயிருடன் இருக்கும்போது, இந்த கேள்வியை கேட்டேன். அவள் எப்பொழுது வெற்றிலைபாக்கு போட்டாலும், சுண்ணும்பு சேர்ப்பதில்லை. — காரணம் என்னவென்று கேட்டபொழுது, "கடவுளுக்கு சுண்ணும்பு வைத்து படைப்பதில்லை — நான் ஏன் சுண்ணும்பை சேர்க்க வேண்டும்" என்று கூறுவாள். சுண்ணும்புடன் போடுவதன் ரகசியம் என்ன? இதில் பலனுண்டா?

ப: சுண்ணும்பு — பாக்குவின் துவர்ப்பையும், வெற்றிலையின் காரத்தையும் முறித்து வாயைச் சிவக்கச் செய்யும். வாய்க் கிருமிகளைக் கொன்று, நாற்றத்தை அழிக்கிறது. சுண்ணும்பு இன்றி தாம்பூலம் ஆகாது. அது முறையுமல்ல! அதனல் உடலுக்கு நலமும் விளையாது. இது தான் சுண்ணும்பு சேர்ப்பதன் ரகசியம் குருதி போல் சிவப்பாக மாறுவது தான் தாம்பூலம் போடுவதன் சிறப்பு.

கே: கடந்த 20—9—73 தேதியன்று, என் குடும்பத்தில் ஓர் அதிர்ச்சியான சம்பவம் நடந்தது. அன்று முதல் என் இதயம் சுருங்கி படபடவென்று அடித்து வருகிறது. இது இரத்தக் கொதிப்பா? அல்லது இரத்த அழுத்தம் என்பதா? சில சமயம் மார்பில் எரிச்சலும் உண்டாகும். இந்த நிலையை போக்கி குணம் பெற ஒரு மருத்துவம் கூறவும்.

ப: அதிர்ச்சியால் இதயத்தில் எங்காகிலும் ஒரு உறுப்பு பிடிப்பு ஆகி இருக்கும். இது இரத்தக் கொதிப்பு, இரத்த அழுத்தம் என்று கூற

முடியாது. பிரண்டைத் துவையல், அரைக்கீரை, தூதுவளை, மஞ்சள் கரிசலாங்கண்ணி போன்ற கீரையினங்களை பகல் உணவுடன் நெய்விட்டு சேர்த்து வர இதய பிடிப்பு நீங்கும் சீமை அத்திப்பழம் ஒன்றை இரவு பாலுடன் சேர்த்து வர எரிச்சல் நீங்கும்.

கே: எனக்கு வயது 19. நான் உணவு உண்ட பிறகு 5 நிமிடங்களுக்கெல்லாம் ஏப்பம் அதிகமாக வருகிறது. புளித்த ஏப்பமாக இருக்கிறது. வயிறு குமுறும் புளித்த உணவை விழுங்குவதா, துப்புவதா என்று தெரியவில்லை. ஏன் இப்படி ஏற்படுகிறது? இதைப் போக்க ஒரு ஆலோசனை கூறவும்.

ப: உமது இரைப்பையில் புளிப்பு ரசம் அதிகமாக ஊறுகிறது என்று பொருள். ஒரு வேளை புண் ஆகியும் இருக்கலாம் மோர்ச்சோறு 4 நாள் சாப்பிட்டு பார்க்கவும் இதில் குணம் கண்டால் தொடர்ந்து சாப்பிடவும். இல்லையெனில் மருத்துவ ஆலோசனையை நாடவும்.

கே: என் வயது 25. என் நாசித் துவாரங்கள் அடிக்கடி அடைத்துக் கொள்ளும். நீர் ஒழுகிக் கொண்டே இருக்கும். தலையை கீழே சாய்த்தால் தலைபாரமாகத் தோன்றும். குளிர் காலங்களில் மூக்கு துவாரங்களில் நமைச்சல், அரிப்பு எடுக்கும். தும்மல் அதிகமாக வரும். மூச்சு விடுவது மிக சிரமமாகிவிடும். இப்படி 7 ஆண்டுகளாக இருக்கிறது. இந்த நோயைப் போக்க தக்க மருந்து கூறவும். ஆங்கில வைத்தியத்தில் குணம் காண முடியவில்லை. நிரந்தரமாக குணம் பெற வழி கூறவும்?

ப: நாள்பட்டுப்போன பீனச நோய் நுரையீரலிலும் பாதித்து உள்ளது. இதற்கு மூலிகையில் தூதுவளை நல்ல பலன் தரும் என்றாலும் மிக உயர்ந்த பொருள் — முத்து பவளம், கஸ்தூரி போன்றவைகளை சித்த மருத்துவர் ஆலோசனைப்படி எடுத்துவர நோய் பூரணமாக ஒழியும்.

கே: நான் ஒரு பெண். என் வயது 32. எனக்கு பனிக்காலத்தில் வாயில் புண்ணும், உதடுகளில் வெடிப்பும், ஓரங்களில் ரணமாகவும் ஏற்படுகிறது 2, 3 மாதங்கள் இப்படி இருக்கும்; பிறகு குணமாகும் கசகசா பாலும், சில நாட்களில் அகத்திக்கீரையும் சாப்பிட்டு பார்த்து சற்று குணமாகி, மீண்டும் புண் உண்டாகிறது. தலையில் சுண்டு உண்டாகிறது. கண் எரிச்சலும் உண்டு. இதற்கு ஒரு முறை கூறவும்?

ப: பனி காலத்தில் தான் உடல் நலம் பாதிக்கும். பொதுவாக பனி காலத்தில் அதி குளிர்ச்சியும், அதிக சூடுள்ள பொருள்களும் நீக்குவது நல்லது. தேங்காய் பாலும் கசகசாவும் அரைத்து காய்ச்சிய பசும்பாலுடன் சேர்த்து தினமும் இரவு நேரங்களில் குடித்து வரவும். தூதுவளை கீரையை நெய்விட்டு வதக்கி. பின்னும் நெய்விட்டு சமையலில் சேர்த்து வரவும். மஞ்சள் பொடியை தாராளமாக உணவில் சேர்ப்பதும் விடியற்காலை கறந்த பசும்பாலில் சிறிது மஞ்சள் சேர்த்து சாப்பிட்டு வருவது நல்லது. ரணம் மழை காலங்களிலும், பனி காலத்திலும் தடுக்கும் உபாயமாகும்.

★

உ

தணிகையம்பதியில் தமிழ்த் திருமணம்!

வாசக அன்பர்களே!

பல்லாண்டுகளாக நீங்கள் வாசித்து வரும் மூலிகை மணியின் ஆசிரியர் ஆ இரா. கண்ணப்பர் அவர்களின் தலைமகன்,

திருநிறைசெல்வன்:

க. வேங்கடேசன், M. A., அவர்களுக்கு

(தமிழ் விரிவுரையாளர், வூரீசு கல்லூரி, வேலூர்)

ஆசிரியர் அவர்களின் குருநாதர்,

திருமுருக. வாரியார் சுவாமிகளின் அருளாசியால்

தமிழ்த் திருமணம் நடைபெற இருக்கிறது.

திருமண நாள்: 10—2—74 பிரமாதீசஹூ தைத்திங்கள் 28-ஆம் நாள்
இடம்: வயக்கர் போல் சித்ரா பௌர்ணமியில தங்குமிடமான வேலூர் வணிக வைசியர் சத்திரம் (தணிகை திருக்குளம் மேலண்டை வாடையில்)

மற்ற விபரங்களும், திருமண மடலும் அடுத்த இதழில் ஒவ்வொரு சந்தா அன்பர்கட்கும் கிடைக்கும் அன்பர்கள் தவறாமல் வந்திருந்து, மணமக்களை வாழ்த்து கூறுவதுடன், தணிகை முருகப்பெருமான் தரிசனமும் கண்டு களித்து பேரின்பப் பெருவாழ்வு எய்த வேண்டுகிறோம்.

அன்று மாலை திருமணத்திற்குப் பிறகு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் 'வள்ளித் திருமணம்' என்ற சொற்பொழிவு கேட்டு பரவசமடையலாம்.

— மேலாளர், மூலிகை மணி.

நம் நாட்டு மூலிகைகள் :

நாகலிங்க மரம்

166-வது மூலிகை] — முன் மாதத் தொடர்ச்சி

உள்ளங்கை, கால் எரிச்சலுக்கு

உலர்ந்த பூவை நெய் விட்டு அரைத்து பிறகு குளிர்ந்த நீரில் அலசி எடுத்து உள்ளங்கை, கால்களில் பூசிவர எரிச்சல் நீங்கும்.

இப் பூவை சிறிது நெய் விட்டுக் காந்தாமல் வறுத்துப் பொடி செய்து தக்க அளவு—5 அரிசி எடை நெய் விட்டுக் குழப்பி உண்ண இரத்த மூலம், நாவரட்சி, வயிற்றுளைச்சல், மலச்சிக்கல், கபத்தோடு கூடிய இருமல், அசீரணம், அதிவியர்வை ஆகியன நீங்கும்.

காய்

இதன் காய் பெரிய விளாம்பழத்தைப் போன்று இருக்கும். இதனை உடைத்து சிறிது புளியும். வெல்லமும் சேர்த்து அரைத்து எலிமிச்சங்காய் அளவு சாப்பிட பேதியாகும். வயிற்றில் உள்ள பூச்சிகள் வந்து வெளியே விழும். வாய் நறுமணமூட்டும்.

விதை

காயிலிருந்து விதையைச் சேகரித்து வைத்துக் கொண்டு, இது ஒரு பாகம், சதாப்பிலை அரை பாகம் சேர்த்தரைத்து சுண்டை அளவு உட்கொள்ள முறைக் காய்ச்சல், பிரமேகம், சுவாசம், காசம், வாத நோய்கள் ஆகியன விலகும்.

மரப் பட்டை

மரப் பட்டையை சிதைத்து மண் சட்டியிலிட்டு 1 லிட்டர் நீர் விட்டு ஊரல் குடிநீராக 24-மணி நேரம் கடந்த பின்னர், அந்த நீரை அரை குவளை வடிகட்டி எடுத்துக் கொண்டு அதில் 2 பாதம் பருப்பு, 10 சாரை பருப்பு. கசகசா 15 கிராம் இவைகளைச் சேர்த்தரைத்துக் கலந்து காலை வேளை மட்டும் குடித்து வர உடல் பலவினம் நீங்கி பலம் உண்டாகும். தேக திடமும், உற்சாகமும், சுறுசுறுப்பும் ஏற்படும்.

வேர் பட்டை

வேர் பட்டையைக் குடிநீராகக் காய்ச்சி குடித்துவர உள்ளடங்கிய வியர்வை பெருகும். காய்ச்சல் நீங்க சிறிது சுக்கும் சேர்த்து காய்ச்சி குடிக்க எல்லாவித காய்ச்சலும் நீங்கும். இந்தக் குடிநீர் ஒருவித நறுமணமுள்ள குடிநீராகும்.

எனவே நமது தென்னாட்டில் உள்ள நாகலிங்க மரத்தின் நற் செய்கைகளை அறிந்த நமது முன்னோர்கள், இதனை இறைவனுக்கு அர்ச்சனை செய்யும் மலராகச் செய்து ஆலயங்கள் தோறும் வைத்து வளர்த்துள்ளனர். வானோங்கி வளரும் இந்த நாகலிங்க மரத்தைக் கண்டாலும், இதனை வலம் வந்து வணங்கினாலும், இதன் இலை முதல் வேர் வரையில் எடுத்து பக்தியுடன் பயன்படுத்தினாலும், எல்லாவித நோய்களும் நாகலிங்கப் பெருமானருளால் நீங்கப் பெறும் என்பதில் ஐயமுண்டோ? வாழ்க வளர்க நாகலிங்க மரம்!

★

உ

முருகா.



— முன் மாதத் தொடர்ச்சி

காது நோய் முறைகள் :

காது வலி இரைச்சல் நீங்க

சதுரகள்ளி அல்லது ஜாங்குமட்டை இலை இவைகளில் ஏதாவது ஒன்றை நெருப்பனலில் காட்டி பிழிய நீர் வரும். இந்த நீரை காதில் 2 துளி விட்டு வரவும்.

காதுகளில் நாய் ஈ புகுந்துவிட்டால் சிகிச்சை

கோழி ஆவாரைச் சாறு, குப்பைமேனி இலைச்சாறு சமமாக கலந்து காதுல் விட்டு வரவும் அல்லது குப்பைமேனி இலைச்சாறும் சிறுகீரைச் சாறும் கலந்து விட ஈ சாகும். பிறகு வெளியே எடுத்து விடலாம்.

காது குத்தல், காது அடைப்புக்கு

வலம்புரிக்காய் இரண்டு, காதட்டி இலை 20, கடல்நுரை 1 எடுத்து 50 மில்லி தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு தினமும் காலை மாலை ஒரு டீஸ்பூன் எடுத்து சூடு செய்து 5 முதல் 6 துளி வரையில் இளம் சூடாக காதில் விட்டு பஞ்சு அடைக்க நாள்பட்ட காது மந்தமும் நீங்கும்.

(குறிப்பு :— இது எம்மிடம் கிடைக்கும். 1 புட்டி விலை ரூ. 3—00 பார்சல் செலவு 2—00 ஆக ரூ. 5—00 M. O. அனுப்பி பார்சலில் பெறலாம்)

காது இரைச்சல் நீங்க

ஒரு வெள்ளைப்பூண்டை காதில் நசுக்கி வைக்க இரைச்சல் நீங்கும். பின்பு எடுத்துவிட வேண்டும்.

காதில் சீழ் வடிதல், ரத்தம் வருதல், குத்தல் குடைச்சல் வலிகளுக்கு

ஒரு வெள்ளைப்பூண்டு, 1 துண்டு பெருங்காயம் சேர்த்து இரும்பு கரண்டியில் நல்லெண்ணை விட்டு நன்றாக காய்ச்சி, ஒரு பஞ்சில் நனைத்து சூடு பொறுக்கும் அளவு 5 முதல் 6 துளி விட்டு காலை மாலை பஞ்சு கொண்டு அடைக்க சில தினங்களில் சீழ் வடிதல் போன்றவை நீங்கும்.

நாள்பட்ட காதுவலி நோய்கள் நீங்க

ஊமத்தன் இலைச்சாறு 100 மில்லி, மயில்துத்தம் 10 மில்லி இடித்து தூள செய்து கலந்து சுத்தமான தேங்காய் எண்ணெய் 100 மில்லி, யாவும் ஒன்றாக கலந்து காய்ச்சி சாறு சுண்டிய பின்பு எடுத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும். காதின் உள்ளே ரணம் இருந்தாலும தினமும் 2 துளி விட்டு வர, சில தினங்களில் காது நோய் சம்பந்தமான நாளபட்ட வலிகளும் நீங்கிவிடும்.

மஞ்சள் காமாலைக்கு

முதல் நாள் கீழாநெல்லி இலையை அரைத்து நெல்லி அளவு உள்ளுக்குச் சாப்பிட்டு பால் குடிக்க. இரண்டாவது நாள் மஞ்சள் கரிசலாங்கண்ணியை எலுமிச்சை அளவு சாப்பிட்டு மோர் குடிக்க, மூன்றாவது நாள் நாயுருவி இலையை மட்டும் சுண்டை அளவு சாப்பிட்டு மோர் குடிக்க. நான்காவது நாள் 1 கைபிடி அருகம்புல் இரண்டு இலை தும்பையும் சேர்த்து அரைத்து நெல்லிக்காய் அளவு சாப்பிட்டு பால குடிக்க. ஐந்தாவது நாள கீழாநெல்லி, கரிசலாங்கண்ணி, நாயுருவி 2 இலை, தும்பை, அருகம்புல் யாவும் ஒன்றாக அரைத்து எலுமிச்சங்காய் அளவு சாப்பிட்டு விட்டு மோர் குடிக்கவும்

இந்த ஐந்து நாளும் மோர் சாதம், பால் சாதம் தவிர இதர பொருள்கள் கூடாது. 6-ம் நாள் கீழாநெல்லி இலையை மட்டும் அரைத்து நல்லெண்ணையில் காய்ச்சி தலை முழுகவும். அன்று பகல் தூக்கம் கூடாது. எந்த விதமான மஞ்சள் காமாலையும் உடலை விட்டு ஓடிபோகும். (தொடரும்)

வாசக அன்பர்கட்கு மட்டும்
எமது தயாரிப்புகள் :

அக்டோபர்—'73 முதல்

[விலைவாசிகள் ஏற்றக் காரணத்தால் சிறிது விலை கூட்டப்பட்டுள்ளது]

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்னானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து, ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரு. 5—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலை முடி கொட்டுவதை நிறுத்துவதுடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரு. 5—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் ஒரு முறை சாப்பிடலாம். குழந்தை முதல் பெரியோர்கள் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை ரு. 3—00

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபக மறதி, வழுக்கைத்தலை, அதிஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரு. 5—00

முசுமுசுக்கைத் தைலம்

தலைக்குத் தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், அகால ரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காச நோயுடையவர்களுக்கு ஏற்றது.

ஒரு புட்டி விலை ரு. 5—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும், பல்லுறுதிக்கும், பல் தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை ரு. 1—00

காது நோய் எண்ணெ

காதில் சீழ் வடிதல், இரத்தம் வருதல், காது வலி, வீக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரு. 3—00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி, கவனமாய்ப் படித்து தேர்வு எழுதி முதன்மையாகத் தேறலாம்.

40-நாள் மருந்து பாக்கெட் விலை ரு. 4—00

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணிக் கீரையால் முறைபடி தயாரித்தது. கண் ஒளிக்கும், பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்நானமாகவும், தினம் தடவிக் கொள்ளவும் ஏற்றது. ஒரு புட்டி விலை ரு. 5—00

புதிய மருந்துகள் விபரம் :

தலைவலிக்கு தைலம்

அடிக்கடி தலைவலி வரும் அன்பர்கள் வாரம் இருமுறை இதனை தேய்த்து ஸ்நானம் செய்துவர படிப்படியாகத் தலைவலி நீங்கும்.

ஒரு புட்டி விலை ரு. 5—00

புழுவெட்டு நீங்கத் தைலம்

தலையில் வரும் புழுவெட்டு, பொடுகு, ஆகியன நீங்க இதனை தினமும் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரு. 5—00

பித்தத்திற்குச் சூரணம்

காபி, டீ, புகையிலை மற்றும் பித்தம் தொடர்பான பொருள்களை அதிகமாக பயன்படுத்துவோர், இந்த சூரணப் பொடியைப் பயன்படுத்தி பித்தத்தை நீக்கலாம். ஒரு பாக்கெட் விலை ரு. 3—50

ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்

நீரிழிவு நோயுடையவர்கட்கு, அந் நோயைக் கட்டுப்படுத்தவும், காபி, டீ, போன்ற பானங்கட்குப் பதிலாக இதனை காபி போல் பயன்படுத்தி நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பாக்கெட் விலை ரு. 5—00

செம்பரத்தம் பூ தைலம்

இளம் வயதினர்கட்கு முடி செழித்து வளர, தலைக்குத் தடவி வந்தால் இத் தைலம் துணைபுரியும். ஒரு புட்டி விலை ரு. 5—00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு, இத்துடன் தபால் செலவு ரு. 2—00 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரு. 3—00 ம், 4 (அ) 5 புட்டிகளுக்கு ரு. 4—00 ம் தபால் செலவு சேர்த்து அனுப்பவும்.

மணியாடர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் கவனிக்க இயலாது.

முகவரி :— ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.
59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ

மூலிகை அகராதி

விஜ—

— முன் மாதத் தொடர்ச்சி

குறட்டை

வேறு பெயர்கள் :— சவரி, பீனசக் குறட்டை, சவுரி. ஆங்கிலம் : டிரிகோ சந்தஸ் பல்மாட்டா, தெலுங்கு : அபுவ்வா, அவ்வகிடபண்டு, மலையாளம் : காகதொண்டி, கன்னடம் : அவகுடி ஹன்னு, அரபு : ஹங்கேல் ஹமார், சமஸ்கிருதம் : மஹா காலா, இந்தி : லால் இன்டிரியான்.

விபரம்

இது பெருமரமேறும் கொடி இனம். இந்தியாவெங்கும் காடுகளில் தன்னிச்சையாக வளரும். மருத்துவப் பயன் மிகுந்ததாகும்.

உபயோக உறுப்பு—பழம், வேர்

சுவை : கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணுதிசயம்

மலரோக்கி பெருமலம் போக்கி, வாதமடக்கி.

குறிஞ்சான்

வேறு பெயர் :— குறிந்தை, ஆங்கிலம் : ஹிப்டெக் மடப் ளோட்டா, தெலுங்கு : வடலயரவா, மலையாளம் : குறிஞ்சா, சமஸ் கிருதம் : அதிமுக்தா, இந்தி : காம்டி.

விபரம்

குறிஞ்சான் கொடியினம். இதில் சிறுகுறிஞ்சான், பெரு குறிஞ்சான என்று இரண்டு விதமுண்டு. உஷ்ண சமவெளிப் பிரதேசங்களில் இந்தியாவெங்கும் காணக் கிடக்கும்.

சிறு குறிஞ்சான்

ஆங்கிலம் : ஜிம்னிமா செல்வஸ்ட்ரா, தெலுங்கு : போட பத்ரா, பட்ல போட்ரா, மலையாளம் : செரு குறிஞ்சா, சமஸ்கிருதம் : சர்ப்பட ரஷ்ட்ரிக், மேஷ ஷிரிங்கி, இந்தி : கோட்டடுடிலாட்டா.

உபயோக உறுப்பு—இலை, வேர்

சுவை : கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணநிசயம்

துவர்ப்பி, பசித்தூண்டி குளிர்ச்சியுண்டாக்கி, உரமாக்கி, கோழையகற்றி, வாந்தியுண்டாக்கி, நச்சரி நுட்புழுக்கொல்லி.

குன்மக் குடோரி

KUNMA KUDORI

இது தென்னிந்தியாவின் ஆற்றோரங்களில் வளரும் செடி.

சுவை : கார்ப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு.

குணநிசயம்

அகட்டு வாய்வகற்றி, கோழையகற்றி.

(தொடரும்)

பொன் மொழிகள்!

— திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அன்பனே!

குடும்பம் ஒரு தருவைப் போன்றது. அதற்கு வேர் மனைவி; அடிமரம் கணவன்; கிளைகள் மக்கள்; இலைகள் அன்பு; மலர்கள் கருணை; பழங்கள் தருமம்.

பலப்பல பறவைகட்கும் மனிதர்கட்கும் நிழல் தந்து மரம் உறைவிடமாக உதவுவது போல் இல்லறத்தான எப்போதும் பிறர்க்கு உதவியாக இருக்கவேண்டும் மனத்தாலும், வாக்காலும், உடம்பினாலும் பிறர்க்கு நன்மை செய.

இல்லறத்தானாக நீ இருப்பாயாகில், உனது முலதனத்தைக் காப்பாற்றி அதன் மூலம் வரும் வருவாயை நல்ல வழியில் செலவிடு. அப்படிச் செய்வாயாயின் உனது மூலதனம் அழியாது. ஆனால் நீ செய்யும் நல்லறம் தொடர்ந்து நடைபெறும்.

மாலை கட்டுபவன் செடிகளை வைத்துக்கொண்டு மலருந்தோறும் மலர்களை எடுத்துத் தொடுத்து விற்பது போல. செடி மூலதனம்; மலர் அதன் வருவாய்.

கரி வியாபாரி மரத்தை வெட்டிச் சுட்டுவிடுகிறான்; மூலம் அழிந்துவிடுகின்றது. அதுபோல் இருக்ககூடாது. பூக் கடைக்காரனைப் போல் இரு. கரிக் கடைக்காரனைப் போல் இராதே.

பெண்களை ஆண்கள் காவல் புரிவதனால், பெண்மை தாழ்ந்ததன்று. மென்மையை வன்மை காவல் புரியும். வன்மைக்கு மென்மை அடங்கும். ஆடவர் வன்மையுடையவர், மகளிர் மென்மையுடையவர். ஆனால் பெண்மையை ஆண்மை காவல் புரிகின்றது.

மருத்துவப் பழமொழிகள் !

உப்புக் கட்டத் தெரியாதவன் துப்புக் கெட்டவன்.

உப்பு மிஞ்சினால் தண்ணீர் போடு, தண்ணீர் மிஞ்சினால் உப்பு போடு.

உப்புக் கட்டினால் உலோகம் கட்டும்.

உண்டபின் ஒரு மைல் நட.

உல்லாச நடை மேலுக்குக் கேடு; மினுக்கு எண்ணெய் தலைக்குக் கேடு

ஊதை அறிந்தவன் வாதி; உப்பை ஒழித்தவன் யோகி.

ஊறிக் காய்ச்சாத குடிநீரும் ஏரிக்காக்காத தண்ணீரும் பயனில்லை.

எட்டியும் எருக்கும் நஞ்சு போக்கும்; இஞ்சி சுரம் சளி போக்கும்.

எருதுக்குப் பிண்ணாக்கு; ஏழைக்குக் கரிசாலை.

எருது கெட்டார்க்கும் எட்டே கடுக்காய்; இளம்பிள்ளைத்தாய்ச்சிக்கும் எட்டே கடுக்காய்.

என்ன தின்றாலும் அதற்கு மேலே நாலு பேரிச்சம்பழம் தின்ன எல்லாம் அடிபடும். (செரிக்கும்)

ஏறும் தேமல் இறங்கும் படர்தாமரை; கூடும் புருவம் குடிகெடுக்கும்

ஐங்காயம் கூட்ட தன்காயம் ஆச்சு.

ஒதிய மரமும் சமயத்துக் குதவும்.

ஒருபோது உண்பான் யோகி
இருபோது உண்பான் போகி
முப்போது உண்பான் ரோகி.

ஓசிப் பொடி வாங்கி நாசியிலே போட்டால், காசிக்குப் போனாலும் கருமம் தீராது

கடலோரம் வேருக்குச் சாமில்லை; கடடாத உப்புக்கு வீரமில்லை.

கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கண்ணி.

கடப்பாறையை விழுங்கிவிட்டுச் சுக்குக் கியாழம் குடித்தால் தீருமா ?

கங்கா ஸ்நானம் துங்கா பானம்.

கடுக்காய்க்கு அகணி நஞ்சு; சுக்கிற்குப் புறணி நஞ்சு.

○ ○ ○

[புலவர், அ. கலியபெருமாள்]

மேக நோய் பற்றிய விவரக் கட்டுரை :-

மேக நோய்க் கிடங்கொடேல்!

(VENEREAL DISEASE)

[புலவர், தே. ப சின்னசாமி, முத்துகாபட்டி]

"சரித்திரம் காணாத போர்களைக் காட்டிலும் அதிக மரணத்தை ஏற்படுத்தியுள்ளது! அப் போர்களில் ஏற்பட்ட காயங்களைக் காட்டிலும் அதிக தொல்லை தந்திருக்கிறது! பெரிதும் வாலிப உயிர்களையே பலி வாங்கி வருகிறது! பெண்களையும், சிறு குழந்தைகளையும் கூட அது பாதிக்கிறது! கை கால்களை முடமாக்குகிறது! மலட்டுத்தனத்தை உண்டாக்குகிறது! குழந்தையின் கண் ஒளியைப் பறித்துவிடுகிறது!" என இதன் கொடுமைகளை விவரிக்கின்றார், Dr. R. A. Valandalar, M. D. அத்தகு கொடுமையானது எது? **அது தான் மேக நோய்!**

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" நீடு நின்று நிலை பெற்றுச் சமூகத்தையே படாதபாடு படுத்தி வைக்கும் கொடும் நோய்களில் முதன்மை இடம் பெறுவது இந்த மேக நோய்! உலகின் எல்லா நாடுகளிலும் நிலவியுள்ளது இது. நாகரீகமற்ற நாடுகளில் இதன் கொடுங்கோலாட்சி மிக்கிருக்கிறது. "நம் நாட்டில் 2 கோடி மக்கள் இந்த வெங்கொடுமை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்" என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ஆண், பெண், சிறியோர், பெரியோர், நல்லவர், கெட்டவர், சரித்திரவீரர், அறிவியல் மேதை, அழகுடை அணங்கினர், அருப்பெரும் கவிஞர், அற்புத எழுத்தாளர், ஆகிய அனைவரும் இதன் பிடியில் சிக்குண்டு தவித்துள்ளனர். சீஸர், நெப்போலியன், ஹிட்லர், பாஸ்வெல், டாஸ்தவஸ்கி, கிளியோபாத்ரா, காகின், கதே, கீட்ஸ் — இவர்களையெல்லாம் இந்நோய் இரையாக்கியுள்ளது.

உலகில் இந் நோய் பெரிதும் தாண்டவமாடும் பத்து பெரிய நகரங்களில் நம் நாட்டு பம்பாய் ஒன்று. வியப்பதற்கில்லை! அங்கு தான் "சிகப்பு விளக்கு" எரிகிறதே! அதை அடுத்த பூனாவில் 30 சதவிதம் மாணவர்கள் இந் நோயால் பிடிக்கப்பட்டுள்ளனர் எனக் கணக்கெடுப்பாளர்கள் கூறியுள்ளனர்.

மேக நோய் என்பது

மேக நோய் என்பது ஒரு தொகைக் குறிப்புச் சொல்லாகும். பிரமியம், கிரந்தி, வெட்டை, நீரடைப்பு, நீரிழிவு, சூலை, குட்டம், முடக்கு

வாதம், அரையாப்பு, மணற்கழலி ஆகியவற்றிற்கெல்லாம் பொதுச் சொல்லே மேக நோய் என்பது. இந்த வகை நோய்களில் சிறப்புப் பற்றியும் முதன்மை பற்றியும் (கொடுமை செய்வதில்) இரு வகை நோய்களைக் குறிப்பிடலாம். அவை மேக கிரந்தி—Syphilis மேக வெட்டை—Gonorrhoea என்பனவாம். இவற்றையே நாம் இங்கு மேக நோய் என்கிறோம். தோப்பில் பல மரங்கள் இருந்தாலும் சிறப்பும், மிகுதியும் பற்றி, 'தென்னந் தோப்பு' என்கிறோமல்லவா?

கிரந்தியையும், வெட்டையையும் ஒன்று சேர்த்தே பிரமியம் என்று குறிப்பிடுகின்றனர். இதனையே 'பெண்ணோய்' என்றும், 'ரகசிய நோய்' என்றும் கூறுகின்றனர். ஆங்கிலத்தில் இதனை Venereal Disease — V. D என்பர். வெள்ளை — Whites வேறு. வெட்டை — Gonorrhoea வேறு. வெள்ளையை—Leucorrhoea என்பர். இது மறை நோயன்று. (V. D.) உடல் சக்தி குறைந்த பெண்களுக்கு இது வரும். (Leucorrhoea—also called whites—is not a venereal disease or even a disease at all—it is a Symptom) கிரந்தி வேறு, வெட்டை வேறு. இரண்டும் ஒருங்கிணைந்து தொழில் நடத்தும். கிரந்தி கொல்லும், வெட்டை உடல் உறுப்புக்களை முடக்கும்.

நோய்க் குறி

கீழ் வயிற்றுப்புசம், நாபியைச் சுற்றி வலி, சிறுநீர் அடிக்கடி பல நிறத்தில் கலங்கி வலியுடன் கழிதல், சிறுநீர்த்தாரை வீங்கி வலி, எரிச்சலாய் இருத்தல், வெளுப்பு மஞ்சளாக சீழ் வெளிப்படல், கட்டி ஏற்படுதல் இருமல் இளைப்பு, சாய்ச்சல் தோன்றல் ஆகிய அனைத்தும் பொதுக் குறிகளாகும். கிரந்தி, வெட்டை பற்றித் தனித்தனியாகப் பார்ப்போம்.

வகை

சித்த மருத்துவத்தில் இதனை 21 வகையாக வகுத்துள்ளனர். வாத, பித்த, சிலேத்தும, வாதபித்த, பித்தசிலேத்தும, தொந்த, கட்டி (Gonorrhoea with Syphilis), சல (Gonorrhoea with Bubo), தந்தி (Gonorrhoea with Gleet), குருதி (Gonorrhoea with Haematuria), சீழ், ஒழுகு, அரித்தரா, கிரிச்சர, கரப்பான், கல், தாது, நீர்சு, வலி, மது, விரண—பிரமியம் என்பனவாம். ஆங்கில மருத்துவத்தில் Syphilis, Gonorrhoea என இரண்டாக வகுத்துள்ளனர்.

மேக கிரந்தி (SYPHILIS)

கிரந்தி Spirochaete (Spiral shapped Bacterium) கிருமியால் உண்டாகிறது. உருப்பெருக்கியால் பார்த்தால் துடிக்கும் தன்மை வாங்கி (cork-screw) போல் இருக்கும். இக்கிருமி பழக்கத்தாலும், கலவியாலும் பரவும். கருவுற்ற பெண்ணுக்குக் குழந்தைக்கும் உண்டாகும். தொற்று ஏற்பட்டவுடனே உடலில் கிருமிகள் புகுந்து தொடரக்கூடியது. பிறப்பு உறுப்பில் சிவப்பு ஏற்படும். மத்தியில் புண்ணும், சுற்றிலும் தோல் தடிப்பும் ஏற்படும். இத்தகு வெளியடையாளம் இன்றியும் வரும். மறைந்து நஞ்சு உடல் முழுதும் பரவும், 7–10 நாளில் வெளிக்காட்டும். குணமானாலும் 6 – 18 மாதங்களுக்குப் பின் வெளிப்படையாக தெரிந்து மீண்டும் வரலாம். இந் நோய் மூன்று நிலைகளாக வளரும். கிருமி தொற்றியதும் தோல் சிவக்கும், நமைச்சல் ஏற்படும். புள்ளி தடித்து கிரந்தி (Glands) யாக மாறும். இதனை முதற்கட்டம் — Primary Stage என்பர். 5 – 8 வாரத்தில் தேகம் முழுதும் சிரங்கு தோன்றும். வெடிப்பு ஏற்படும். தொண்டைப்புண் இருக்கும். கட்டி, சுரம் இருக்கும். மயிர் உதிரும். குருதி குறைவு ஏற்படும். இதனை Secondary Stage என்பர். மூன்றும் நிலையில் Third Stage உறுப்புகள் வலிமை குறையும். நரம்பு முழுதும் பாதிக்கும். செப்பு நிறக் கட்டி, தோல் தடிப்பு, அரிப்பு, ஊனீர் வடிதல். எலும்பில் கட்டி தோன்றி மூட்டுக்களில் வலி, வாய், உதடு, பிறப்புறுப்பில் புண் பெரிதல். இந் நோய் தொடக்கத்தில் மருத்துவம் செய்தால் கட்டுப்படும். காலந் தாழ்ந்தால் முதுகுத்தண்டு, மூளை, கண், இதயம் பாதிக்கும். வாழ்வே நரகமாகும்; இரு தலைமுறைக்கும் தொடரும்.

மேக வெட்டை (GONORRHOEA)

இது Gonococcus (a type of Bacterium) கிருமியால் உண்டாவது. இது கலவியால் தொற்றிப் பரவும். கிருமி புகுந்த 3 – 5 நாளில் கிரந்தப் புண்—Chancre தோன்றும். இதுவே முதற்குறியாம் பால் உறுப்பில் பரு, கொப்புளம், புண் ஆக வளரும். புண் மறைந்தாலும் நோய் மறைந்திருக்கும். 3 – 6 வாரத்தில் சிரங்கு தோன்றும். அது செந் தவிட்டு நிறமாக இருக்கும். வாயில் வெடிப்பு, புண் தோன்றும். தலை வலி, சுரம், தொண்டைப்புண் வரும். பெண்களுக்குத் தெரிவது கடினம். வெள்ளை நீர் கழியும், எரிச்சல், வலி இருக்கும். இதனை வெள்ளை— Leucorrhoea எனத் தவறாக நினைத்து விடுவர். உடன் கவனியாது விட்டால் இக்கிருமி அண்டக்குழாய் - Fallopion tubes சூற்பை—Ovary வரை சென்று மலட்டை உண்டாக்கும்; மரணத்தை விளைவிக்கும். பால் உறுப்பு, கண் போன்ற நொய்தான சவ்வுகளில் தான் இக் கிருமி வாழும்.

(தொடரும்)

அனுபவம் உணர்ந்த உண்மை

வாரணுசி ஸ்ரீநிவாசன்,
59 கும்பகோணம் தெரு,
பண்ணுருட்டி (S. A. Dt.)

ம-ா-ா-ஸ்ரீ, டாக்டர் ஆ இரா. கண்ணப்பர் அவர்களுக்கு. வணக்கம்.

ஐயா, எனக்கு ஏற்கனவே தங்களிடம் வந்தபொழுது விரைவீக்கத்திற்கு (ஆபரேஷன் செய்ய இருந்த நிலே) தங்கள் ஆலோசனையின் பேரில் வாதநாராயண இலேயை விளக்கெண்ணெயில் வதக்கி வாரம இருமுறை கட்டி வந்தேன். வீக்கம் குறைந்து வலியும் இல்லே. எனக்கு மிகவும மகிழ்ச்சியாக இருக்கிறது.

M. சிவசுப்ரமணியன்,
ஸ்ரீ மங்கள விலாஸ் ரைஸ்மில்,
நடுவக்குறிச்சி P O.
திருநெல்வேலி-3.

அன்பும் அருளுமுள்ள டாக்டர் அவர்களுக்கு,

வணக்கம். ஐயா, எனக்கு கடந்த ஐந்தாண்டு காலமாக, நீரழிவு நோய் இருக்கிறது அதற்கு ஆகார மூலமாயும், ஹோமியோபதி சித்தா, ஆயுர்வேத மருந்துகளும் சாப்பிட்டு வந்தேன்; பயனில்லே! மேலே குறிப்பிட்ட சர்க்கரை வியாதிக்கு தங்களின் "நம நாட்டு மூலிகைகள்" வெளியீட்டில் "ஆவாரை" கட்டுரையில் சொன்னபடி, கடலேயை புதுச்சட்டியில் சீமை அத்திப்பழததுடன் நனேயப்போட்டு மறுநாள் காலே ஆவாரை இலேயுடன் சாப்பிட சொன்னபடி 20-நாட்கள் சாபபிட்டேன்; நல்ல குணம் தெரிகிறது.

N. கிருஷ்ணன் ரெட்டியார்,
ஒலப்பாளையம். P. O.
ஈரோடு R.M.S.

பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

நான் தங்களின் மூலிகை மணியின் சந்தாதாராக சில ஆண்டுகளாக இருந்து வருகிறேன். அதனல் பல நன்மைகளும மன நிம்மதியும அடைந்துள்ளேன் தங்களிடமிருந்து பெற்ற "தாளிசு கலவை பொடியை" எனது குழந்தைகளுக்கும், எனது வீட்டின் அருகில் உள்ளவர்களுக்கும், காய்ச்சல் வரும்போது கொடுத்து, அதன் சக்தியையு, மகிமையையும் பறக்க முடியாத அளவிற்கு காய்ச்சல குறைந்துள்ளது. மேலும் அருகில உள்ளவர்களுக்குக் கொடுத்த போது, அவர்கள் மிகவும் ஆச்சரியப்படும அளவிற்கு காய்ச்சல் குறைந்தது. இதன் பலனே, இதை அளித்த தங்களுக்கு தெரியப்படுத்தவேண்டு மென்ற ஆவலால் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

இதய ஒலி!

புலவர், பாண்டியன், 17—12—78

கவுல் பஜார் நெடுஞ்சாலை,

பெருந்தகையீர்! வணக்கம். பல்லவபுரம், சென்னை.

தாங்கள் அன்புடன் அனுப்பிய 'மூலிகை மணி' கிடைத்தது. மிகவும் நன்றி! இதுவுடன் இணைக்கப்பட்டிருந்த 'சித்த மருத்துவத்தின் கருப்பொருள்' என்னும் வெளியீடு மிகச் சிறந்த பயனுள்ள அரிய நூல். படிக்கப் படிக்க பயன் ஊறும் சிறந்த கருவூலம். தக்க சமயத்தில் இதனை வெளியிட்டு நாட்டுக்கு உதவிய தங்களை என்ன சொல்லிப் பாராட்டுவது? வாழ்க மூலிகை மணி! வளர்க உங்கள் தொண்டு!!

தங்கள் அன்புள்ள, புலவர். பாண்டியன்

சி. சோலைமுத்து, 13—12—78

வயர்லஸ் ஆபரேட்டர், போலீஸ் கன்ட்ரோல் ரூம்,

கண்டோன்மெண்ட்,

மதிப்பிற்குரிய மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு, திருச்சி-1.

வணக்கம். உங்கள் புத்தகத்தை ஒரு முறை வாங்கிப் படித்தவுடனே உங்களிடம் நான் ஒரு சந்தாதாரராக சேர விரும்புகிறேன். நான் எத்தனையோ புத்தகங்களைப் படித்திருக்கிறேன். ஆனால் மூலிகை மணியைப் போல் ஒரு நல்ல பயன் தரும் புத்தகத்தை நான் இதுவரை படித்ததில்லை. ஆயிரக் கணக்கில் பணத்தை செலவழித்தும் பயன் அடையமுடியாத நோய்களை மூலிகை மணி மூலம் — குறைந்த செலவில் பயன் அடைவதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படிக்கு, சி. சோலைமுத்து

பி. பொன்னம்பலனார், 11—11—78

முன்னாள் ஆசிரியர், எலிமெண்ட்ரி ஸ்கூல் தெரு,

குளித்தலை அஞ்சல்.

கந்தன் கழலடி கருதும் கண்ணியமுடையீர்! திருச்சி மாவட்டம்.

வணக்கம் பல. மூலிகைகளைப் பற்றி எவ்வளவோ நூல்கள் இருப்பினும், அவைகளில் மூலிகைகளின் உருவப் படங்கள் கிடையாது. மேலும் பரிபாஷையில் பெயர்கள் பல. எனவே உறுதியாக மூலிகைகளை கண்டுகொள்ள முடிவதில்லை. நூல்களில் கூறும் பெயர்கள் ஒன்று; மக்கள் அனுபவத்தில் வழங்கும் பெயர்கள் வேறு. இவைகளைத் தெள்ளிதில் உணர தங்கள் புத்தகங்களே நன்கு உதவிபுரிகின்றன.

இன்னணம், பி. பொன்னம்பலனார்.

மூலிகை மணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும் வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர். 59. மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-632001 (வ. ஆ.)